**செய்தி வெளியீடு எண் : 1751** **நாள் : 07.10.2022**

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் வனப்பரப்பை அதிகப்படுத்தி, பசுமைப் போர்வையை விரிவுபடுத்தும் வகையில் பசுமை தமிழ்நாடு இயக்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த24.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழக வனம் மற்றும் பசுமைப் பரப்பினை 33சதவீதமாக உயர்த்துவதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு இவ்வியக்கம்தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மரம் வளர்ப்பிற்குஊக்குவித்தல் இவ்வியக்கத்தின் நோக்கமாகும்..

அதனடிப்படையில், வேளாண் பெருமக்கள், தொழில் நிறுவனங்கள், மக்கள் நலச்சங்கங்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் தனி நபர்கள் மரக்கன்றுகளை எளிதாகப் பெறும்பொருட்டு, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இணையதள முகவரியில் (www.greentnmission.com) பயன்பாட்டாளர்கள் தங்களது சுய விபரங்களை பதிவு செய்து, தங்களுக்கு தேவையான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. வேளாண் பெருமக்கள்,மரக்கன்றுகளை நடுவதற்கு தங்களுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய விவரங்களுடன் தங்களுக்குத் தேவைப்படும் மரக்கன்றுகளை இணைய தளம் மூலமாகவோ அல்லது கடிதத்தின்வாயிலாக **இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம், பனகல் மாளிகை, 8வது தளம், சைதாப்பேட்டை ,சென்னை –600 015** என்கிற இவ்வலுவலக முகவரிக்கு அனுப்பி வைத்து பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பாக கூடுதல் விவரங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெற 18005997634 என்கிற இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இயக்குநர்**

**பசுமை தமிழ்நாடு இயக்கம், வனத்துறை,**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in